**2026 ஜூன் மாதம் 08– ஆம் தேதி திங்கட்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 72/2025**

O.S. No.: 72/2025 – மல்லிகா PW1 08.06.2026
க/பெ.சுரேஷ்குமார்

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் எங்கு, யார் முன்னிலையில் கையொப்பம் செய்தேன் என்றால் எனது வழக்கறிஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன், நான் விபரம் சொல்லி அவர் தயார் செய்தார், அதில் உள்ள முழு விபரங்கள் எனக்கு தெரியும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் தையல் தொழில் செய்து வருகிறேன். எத்தனை வருடங்களாக வேலை செய்து வருகிறேன் என்றால் திருமணம் ஆனதிலிருந்து சுமார் 30 ஆண்டுகளாக தையல் தொழில் செய்து வருகிறேன். மாதம் எவ்வளவு வருமானம் ஈட்டி வருகிறேன் என்றால் சுமார் ரூ.10,000/– முதல் ரூ.20,000/– வரை வருமானம் தையல் தொழில் மூலம் வருமானம் ஈட்டி வருகிறேன், தையல் கடையின் பெயர் என்ன என்றால் வீட்டிலிருந்து தைத்து கொடுக்கிறேன்.

2. எனது கணவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் லாரி ஓட்டுநர், அவரது மாத வருமானம் ரூ.30,000/– ஆகும். என்ன லாரி ஓட்டுகிறார் என்றால் லாரியின் பெயர் தெரியாது. எனக்கும், எனது கணவருக்கும் சேர்ந்து மாத வருமானம் ரூ.50,000/– என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை. பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் அவர் எனது அத்தை, சிறுவயது முதலே எனக்கு தெரியும். பிரதிவாதி கடையில் துப்புரவு தொழில் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கணவர் பாதுகாவலராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு இரண்டு

மகன்கள், ஒரு மகள் உள்ளார் என்றாலும், அவர்களுக்கு 15 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான்.

3. நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கி திருப்பி கொடுக்கவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதனடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதியின் இடப்பத்திரம் மற்றும் கடனுறுதிச்சீட்டு ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அசல் பத்திரத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நானும், எனக்கு தெரிந்த இரண்டு நபர்களிடம் பணம் வாங்கி நான் பிரதிவாதியிடம் பணம் கொடுத்தேன், அதனால் பணம் வாங்கியவரிடம் அசல் பத்திரத்தை கொடுத்துள்ளேன். ரூ.14,00,000/–த்தை நான் சொன்ன இரண்டு நபர்கள் மற்றும் என்னுடைய பணத்தை சேர்த்து பிரதிவாதியிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

4. இவ்வழக்கில் ரூ.14,00,000/–த்தை யார் யாரிடம் எவ்வளவு பணம் வாங்கி பிரதிவாதிக்கு கொடுத்துள்ளேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள் பெயர்கள் என்ன என்றும், அதில் என்னுடைய தொகை எவ்வளவு என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.14,00,000/– மூன்று நபர்களின் பணம் என்பதால் அந்த இரண்டு நபர்களை தரப்பினராக சேர்த்து ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தான் அவர்களிடம் பணம் வாங்கி பிரதிவாதிக்கு கொடுத்தேன். அவ்வாறு அவர்களிடம் பணம் வாங்கி பிரதிவாதியிடம் கொடுத்ததற்கு கமிஷன் என்ன கொடுத்தார்கள் என்றால் கமிஷன் எதுவும் நான் வாங்கவில்லை.

5. கடனுறுதிச்சீட்டில் யார் யார் எழுதி, எங்கு வைத்து கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் எனது வீட்டில் பஞ்சம்மாள், ராஹினி, கணேசன்

ஆகியோர்கள் இருந்தார்கள், மகேஷ்வரனை பிரதிவாதி அழைத்து வந்தார். கணேசனையும், ராகினியையும் யார் அழைத்தார்கள் என்றால் அவர்கள் என் வீட்டில் இருந்தார்கள். யார் அழைத்து வந்தார்கள் என்றால் யாரும் அழைத்து வரவில்லை, அவர்கள் எனது வீட்டில் இருந்தார்கள். மகஷே்வரன் பிரதிவாதியின் மகன் என்றால் இல்லை. பிரதிவாதியின் மகன் பெயர் மகேஷ்வரன் என்றால் எனக்கு தெரியாது. வங்கியிலிருந்து பணம் எடுக்கப்பட்டதா என்றால் எனது நகைகளை வங்கியின் அடகு வைத்து எடுத்து கொடுத்தேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. கடனுறுதிச்சீட்டில் எத்தனை முத்திரைவில்லைகள், எவ்வளவு ரூபாய் முத்திரைவில்லைகள் ஒட்டப்பட்டிருந்தன, அதில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் ரூ.1.50/– மதிப்புள்ள ஒரு முத்திரைவில்லையில் பிரதிவாதி ஒரு கையொப்பம் செய்தார். கடனுறுதிச்சீட்டு, முத்திரைவில்லைகளை யார் வாங்கி வந்தார்கள் என்றால் பிரதிவாதி பஞ்சம்மாள் வாங்கிவந்தார். பத்திரத்தை அவரே எடுத்து வந்தார். பிரதிவாதி எத்தனை நாட்களாக கடன் என்னிடம் கேட்டார் என்றால் ஒரு வாரமாக மூன்று முறை என்னிடம் கேட்டார், உறவினர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன். இதற்கு முன்னர் பிரதிவாதிக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் மகன் குபேந்திரன் மற்றும் மகேஷ்வரனுக்கு தலா ரூ.50,000/– கொடுத்ததாக அவர்கள் என்மீது அல்லிநகரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

7. எனது தாயார் பிரதிவாதியின் மகன் குபேந்திரன் மற்றும் மகேஷ்வரனுக்கு கடன் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. கடனுறுதிச்சீட்டில் எத்தனை நபர்கள் கையொப்பம் செய்தார்கள் என்றால்

பிரதிவாதியை சேர்த்து 3 நபர்கள் கையொப்பம் செய்தார்கள். ரூ.14 லட்சம் பணத்தை வங்கி மூலம் கொடுத்தேனா என்றால் நேரடியாக கொடுத்தேனா என்றால் ரூ.500/– தாள்களாக 28 கட்டுக்கள் கொடுத்தேன். ஒரு கட்டில் எத்தனை ரூ.500/– தாள்கள் இருந்தன என்றால் 100 எண்ணம் இருந்தன. 28 கட்டுகளும் வங்கியிலிருந்து நகையை அடமானம் வைத்து வாங்கி வந்த கட்டுக்கள் என்றால் சரிதான். கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்த நபர்களை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

8. மாதம் எவ்வளவு வட்டிக்கு கடன் கொடுத்தேன் என்றால் ரூ.1/– வட்டிக்கு கொடுத்தேன். வங்கியின் பணம் வைப்பீடு வைத்தால் மேற்படி ரூ.1/– வட்டி கிடைக்கும் என்றால் எனது அத்தை என்பதால் கடனாகக் கொடுத்தேன். பத்திரத்தை ஏன் பதியவில்லை என்றால் எனது அத்தை என்பதால் நம்பிக்கையின்பேரில் பதிவு செய்யவில்லை, கடனுறுதிச்சீட்டுக் கொடுத்தார். ஈடுப்பத்திரம் பதிவு செய்தவற்கு ரூ.12,000/– செலவாகும் என்றாலும், அவ்வாறு கடன் கொடுத்திருந்தால் பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> – பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.06.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.08 16:32:24 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
08.06.2026.